# மலையக பாடசாலையும் மாணவர் இடைவிலகளும். (ப/கொஸ்லந்தை ஸ்ரீ கணேஷா தமிழ் மகாவித்தியாலயத்தை மையமாக கொண்ட ஆய்வு)

**ம. திபாகரன்**
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்
thibaharanf123@gmail.com

**ஆய்வு சுருக்கம்:**

21ம் நூற்றாண்டு அறிவு மைய காலம் என்பதை நிரூபிக்கும் முகமாக பெற்றோர்களும், மாணவர்களும் கல்விக்குரிய முக்கியத்துவத்தை அறிந்து செயற்படுவதுடன் இதனை உணர்ந்த இலங்கை அரசும் இலவச கல்வியுடன் செயற்படுத்தப்பட்ட கட்டாய கல்வி, பாடசாலைக் கல்வி, விஞ்ஞானக்கல்வி, தொழிநுட்பக்கல்வி என பல கல்வி முறைகளை அறிமுகப்படுத்தினாலும் ஏனைய சமூக மாணவர்களுடன் ஒப்பிடும் போது மலையக சமூக மாணவர்கள் கல்விக்குரிய முக்கியத்துவதை கொடுக்காமல் அதனைப் புறக்கணித்து பாடசாலையை விட்டு அதிகமாக இடைவிலகுகின்ற நிலைக் காணப்படுகின்றது. ஆகவே ஏன் இவ்வாறு மலையக பாடசாலை மாணவர்கள் அதிகமாக பாடசாலையை விட்டு இடைவிலகுகின்றனர் என்பதை கண்டறியும் முகமாக ‘‘மலையக பாடசாலையும் மாணவர் இடைவிலகளும்’’ எனும் தலைப்பில் ப/கொஸ்லந்தை ஸ்ரீ கணேஷா தமிழ் மகாவித்தியாலயத்தை மையமாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டதுடன் இவ் ஆய்வுக்கு முதலாம் நிலைத் தரவுகளை சேகரிப்பதற்காக நோக்க மாதிரியின் அடிப்படையில் 30 மாணவர்கள் தெரிவு செய்யப்ட்டு அவர்களுக்கு வினாக் கொத்துகள் வழங்கப்பட்டு தரவுகள் பெறப்பட்டன. அத்துடன் நேர்காணல், குவியகுழு கலந்துறையாடல் மூலமும் இரண்டாம் நிலைத் தரவுகளாக மாணவ வரவு அறிக்கைகள், ஆசிரியர் வரவு அறிக்கைகள், மாணவ மதிப்பீட்டு அறிக்கைகள், நூல்கள் போன்றவைகள் மூலம் பண்பு ரீதியான, அளவு ரீதியான தரவுகள் பெற்றுக் கொள்ளப்பட்டு பகுப்பாய்வு செய்ததன் விளைவாக பொருளாதார, சமூக, குடும்ப, சூழல், பாதுகாப்பு போன்ற பல காரணிகள் மாணவர்கள் இடைவிலகளுக்கு காரணங்களாக அமைந்தாலும் பெற்றோர்களின் அசமந்தப் போக்கே அதிகமான மாணவர்கள் இடைவிலகளுக்கு காரணங்களாக அமைந்துள்ளமையை கண்டறியப்பட்டுள்ளன. எனவே இலவசக் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்த்தும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை பெற்றோர்களுக்கும், மாணவர்களுக்கும் நடத்துவதன் மூலம் மாணவர் இடைவிலகளை குறைக்க முடியும்.

***பிரதான சொற்பதங்கள்**: இடைவிலகள், பாடசாலை, மாணவர்கள்.*

## ஆய்வின் அறிமுகமும் முக்கியத்துவமும்

இன்றைய காலத்தில் கல்வி என்பது அனைத்து சமூகத்திலும் அங்கிகரிக்கப்பட்டதும் அவசியமானதுமான ஒரு விடயமாக கணிக்கப்படுகின்றது. இதனாலேயே 21ஆம் நூற்றாண்டினை அறிவுமையத் தகவல்மைய நூற்றாண்டு என்றும் அந்நூற்றாண்டின் சமூகம் அறிவு சார் சமூகம் என்றும் வர்ணிக்கப்படுகின்றது. எனினும் மனித வாழ்வில் சகல அம்சங்களின் மேம்பாடும் முன்னேற்றமும் இறுதியில் கல்வியினாலே தீர்மானிக்கப்படும் என்ற சிந்தனை 20ஆம் நூற்றாண்டிலேயே வேரூன்ற தொடங்கிவிட்டது. 1920ஆம் ஆண்டலவில் மேலைநாட்டு பொருளியல் சிந்தனையாலரான ‘‘அல்பரட் மார்சல்’’ உற்பத்திக்கான சக்திவாய்ந்த சாதனம் அறிவு என்றும் அதனை கொன்டே இயற்கையை பயன்படுத்தி மனிதனின் தேவைகள் நிறைவேற்றபட வேண்டும் என்று கருத்து தெரிவித்தார். (சந்திரசேகரன்,1999) இவ்வாறு சிறப்பு வாய்ந்த கல்வியை வழங்குவதில் பாடசாலைகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. இதனாலேயே ஒரு பாடசாலை திறக்கப்படும் போது ஆயிரம் சிறைச்சாலைகள் மூடப்படுகின்றன

என்ற கருத்தும் கல்வியின் முக்கியத்துவத்தை கூறுகின்றது. மேலும் ஒரு பிள்ளைக்குள் நல்ல பண்புகளை விதைத்து, அவனுள் இருக்கும் தீய பண்புகளை அகற்றி நல்லப் பிள்ளையாக அவனைப் பாடசாலைகள் மாற்றி விடுகின்றன. பண்பாடு, அறிவு, ஞானம், விஞ்ஞானம், கலை பரிமாற்றப்படும் இடமாக பாடசாலை காணப்படுகிறது. அத்துடன் ஒரு பிள்ளையின் ஆளுமையை உருவாக்குவதில் பாடசாலைக்கு கணிசமான பங்கு உண்டு. இதனாலேயே பாடசாலைக் கல்விதிட்டம் மூலம் ஒரு பிள்ளையின் மனப்பாங்கை தேவைப்படும் வகையில் மாற்ற முடியும் என பல அறிஞர்கள் கருத்து தெரிவித்திருக்கினர். இதனாலேயே அதிகமான பெற்றோர்கள் தங்கள் பிள்ளைக்குரிய கல்வியை பாடசாலையில் வழங்க முயச்சிக்கின்றனர். (ஆய்யுப், 2013)

சர்வதேச ரீதியாக நோக்கும் போது வளர்சியடைந்த நாடுகளிலும் கைத்தொழில் மயமாக்கம் பெற்ற நாடுகளிலும் பாடசாலைக் கல்வியில் 100% மான சேர்வு, காணப்படுவதுடன் பாடசாலை கல்வி பன்முகப்படுத்தப்பட்டு தொழில்சார் தொழிநுட்பம், தகவல் தொழிநுட்பகல்வி என விரிவடைந்து காணப்படுகின்றது. அந்த வகையில் இலங்கையை எடுத்து நோக்கும் போது தேசிய கல்வி முறையில் புதிய கல்வி சிந்தனையின் தாக்கம் பல புதிய சீர்த்திருத்தங்களை மேற்கொள்ள துணை நிற்கின்றன இவ் அடிப்படையில் 1945 ஆம் ஆண்டு இலவச கல்வியின் அறிமுகம் அதனைத்தொடர்ந்து கட்டாய கல்வி, விஞ்ஞானக்கல்வியின் விரிவு, கணணிக்கல்வி, பாடசாலை இடைவிலகியோருக்கு திறந்த பாடசாலைகள், உயர் கல்வியில் திறந்த பல்கலைகழகக்கல்வி மற்றும் ஆசிரியர்களுக்கான பல கல்வி முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. இதன் மூலம் இலங்கை எழுத்தறிவு வீதம் 97.3 வீதமாக உயர்ந்து காணப்படுகின்றது. இவ்வாறு கல்வியில் தேசியரீதியில் தேறிய நிலை காணப்பட்டாலும் மலையகத்தை பொருத்த வரையில் கல்வி ரீதியான முன்னேற்றம் என்பது மிகக்குறைவாக காணப்படுகின்றது. அத்துடன் சமூக நீதி, கல்வியில் சம வாய்புக்கள் மற்றும் மேம்படுத்தப்பட்ட பல முயற்சிகள் மலையக தமிழர்களை சரியாக எட்டவில்லை. இதனால் மலையக எழுத்தறிவு வீதம் 58.5 வீதமாக உள்ளதுடன் மாணவர் சேர்வு வீதம், பல்கலைகழக அனுமதி போன்றவற்றில் பின்தங்கி உள்ளனர். (சந்திரசேகரன், 2004) அத்துடன் மலையக பெருந்தோட்டப்பகுதியில் 13.1% மான பிள்ளைகள் பாடசாலைச் செல்லாதவர்களாகளாகவும், தரம் 5 வரை பாடசாலை செல்வோர் 43% மாகவும், தரம் 6-10 வரை 37.7% மானவர்களும், சாதாரன தரம் சித்தியடைவோர் 3.8% உயர் தரம் சித்தியடைவோர் 2.3% மாவுமே காணப்படுகின்றனர் (சந்திரசேகரன், சோ. 2016)

ஆகவே மலையக கல்விவளரச்சிக் குறைவுக்கு பல்வேறு காரணங்கள் காணப்பட்டாலும் மிக பிரதான காரணங்களின் ஒன்றாக மாணவர் இடைவிலகள் காணப்படுகின்றது. எனவே மலையக கல்வி தொடர்பாக ஒரு சில ஆய்வுகள் மேற்கொள்ளப் பட்டிருந்தாலும் மாணவர் இடைவிலகல் தொடர்பான ஆய்வுகள் மேற்படி ஆய்வு பிரதேசத்தில் மேற்கொள்ளப் படாமையால் இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

**ஆய்வு பிரச்சினை.**

தற்காலத்தில் கல்வி என்பது அவசியமான ஒன்று என்பதுடன் கல்வியை பெறுவதற்கு பாரியளவு பணத் தேவையும் அசியமான ஒன்றாகும்.இதனாலேயே இலங்கை அரசு மக்களின் தேவைகளில் ஒன்றான கல்வியை இலவசமாக வழங்குகின்றது. எனினும் ஏனைய சமூகங்களுடன் ஒப்பிடும் பொழுது வறுமையில்

கூடியளவு பாதிக்கப்பட்டுள்ள மலையக மாணவர்கள் இவ் இலவச கல்வியை புறகணித்து பாடசாலையை விட்டு இடை விலகுகின்ற நிலை அதிகமாக காணப்படுகின்றது.ஆகவே ஏன் மலையக மாணவர்கள் இவ் இலவச கல்வியை புறகணித்து இடை விலகுகின்றனர் என்பதே ஆய்வு பிரச்சினையாகும்.

**ஆய்வு நோக்கம்.**

மலையக மாணவர்கள் இலவச கல்வியை புறகணித்து இடை விலகுவதில் செல்வாக்கு செலுத்தும் காரணிகளை கண்டறிவது ஆய்வின் பிரதான நோக்கமாகும்.

அவ்வாறு இடைவிலகிய மாணவர்களின் தற்போதைய நிலையை அறிய முயச்சித்தல். துணை நோக்கமாகும்.

**தரவு சேகரிப்பும் ஆய்வு முறையியலும்.**

ஆய்வு நோக்கத்தினை அடைந்து கொள்ளும் பொருட்டு சமுக விஞ்ஞான ஆய்வு என்ற வகையில் பண்பு சார், அளவு சார் தரவுகளைப் பெற்று கொள்ளும் நோக்கில் முதலாம் நிலை தரவுகளை சேகரிப்பதற்காக நோக்கு மாதிரியின் அடிப்படையில் 30 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு வினா கொத்துகள் வழங்கப்பட்டு தரவுகள் பெறப்பட்டன. நேர்காணல், குவியகுழு கலந்துறையாடல் மூலமும் இரண்டாம் நிலை தரவுகளாக மாணவ வரவு அறிக்கைகள்,ஆசிரியர் வரவு அறிக்கைகள், மாணவ மதிப்பீட்டு அறிக்கைகள்,நூல்கள், பத்திரிக்கைகள் என்பவைகள் மூலம் தரவுகள் சேகரிக்கப்படடு ms excel, ms access, மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டன.

**பெறுபேறுகள்.**

தரவுகளை பகுப்பாய்வு செய்யப்பட்டதன் விளைவாக 691 மாணவர்கள் கல்வி பயிலும் மேற்படி பாடசாலையில் வருடாந்தம் 60 க்கும் மேற்பட்ட மாணவர்கள் இடைவிலகுகின்றமை அறியக்கூடியதாக உள்ளதுடன் அவர்களில் 31.6% மானவர்கள் தரம் 9,10 ஐ சேர்ந்தவர்கள் ஆவர் அதாவது 2015 ஆம் ஆண்டு தரம் 10 இல் 11 மாணவர்களும், தரம் 9 இல் 8 மாணவர்களும் தரம் 11 இல் 3 மாணவர்களும் இடைவிலகியுள்ளர். இவ்வாறு கல்வியை புறக்கணித்து அதிகமாக பாடசாலையை விட்டு இடைவிலகுகின்றமைக்கு பின்வரும் காரணங்கள் செல்வாக்கு செலுத்துகின்றமை கணக்கூடியதாக உள்ளன.

**<u>வறுமை</u>**

மாணவர்கள் இடைவிலகளுக்கான பிரதான காரணங்களுள் முக்கியமான காரணமாக வறுமை காணப்படுகின்றது.அந்தவகையில் இவ் வறுமை ஏற்படுவதற்கு பிரதான காரணமாக காணப்படுவது அதிகரித்து வரும் விலையேற்றத்துக்கு ஏற்ப தோட்ட தொழிளாளிகளின் சம்பளம் அதிகரிக்கப்படாமையே ஆகும் .இதனால் இவர்கள் தங்கள் பிள்ளைகளுக்குரிய கல்வி நடவடிக்கைக்குரிய செலவினங்களை மேற்கொள்ளமுடியாத நிலை காணப்படுகின்றமையால் மாணவர்கள் பாடசாலையிலிருந்து இடைவிலக வேண்டிய நிலை உருவாகின்றது.

**குடும்ப தலைவரின் குடிப்பழக்கம்**

குடும்ப தலைவரின் குடிப்பழக்கம் காரணமாக அதிகமான குடும்ப தலைவரின் வருமானம் அவருடைய குடிப்பழக்கத்திற்கே செலவாகின்றமையால்

பிள்ளைகளுக்குரிய கல்வி செலவுக்குரிய பணம் கிடைப்பதில்லை. மேலும் தந்தையின் குடிப்பழக்கத்தால் ஏற்படும் விபரீதங்கள் மாணவர்களுடைய அந்தஸ்தை குறைப்பதால் மாணவர்கள் பாடசாலைகக்கு செல்லாத நிலை உருவாகின்றது.

**காட்டு யானைகளின் தொல்லை**

இவ் பாடசாலை அமைந்துள்ள பிரதேசம் காட்டுயாணைகளுடைய ஆதிக்கம் நிறைந்த பிரதேசம் ஆகையால் மாணவர்கள் காட்டு யானைகளுடைய தாக்குதல்களுக்கு உள்ளாகக்கூடிய நிலை உருவாகும் என்ற அச்சம் காரணமாக மாணவர்கள் பாடசாலைக்கு செல்ல மறுத்து வருகின்றனர்.

**போக்கு வரத்து வசதியின்மை**

மலையக மக்களை பொருத்தவரை அவர்களுடைய குடியிருப்புகள் மலைப்பாங்கான பிரதேசங்களில் அமைக்கப்பட்டிருப்பதால் அங்கு சென்று வருவதற்குரிய பாதை வசதிகள் மிகவும் குறைந்த நிலையில் காணப்படுகின்றமையால் மாணவர்கள் உரிய நேரத்துக்கு பாடசாலைக்கு சமூகம் தருவதிலும், பாதுகாப்பு சார்ந்த விடயங்களிலும் பெரும் சிரமத்தை எதிர் கொள்வதால் அவர்கள் பாடசாலையை இடைநிருத்தும் தீர்மானத்தை எடுக்கின்றனர்.

**தாய் தொழில் நிமித்தம் வெளிநாடு செல்லல்**

மலையகப்பகுதியில் தாய்மார்கள் அதிகமாக வீட்டு பணிப்பெண்ணாக வெளிநாடு செல்வதினால் வீட்டில் பிள்ளைகளை கவணிக்க யாரும் இல்லாத நிலை உருவாவதுடன், பிள்ளைகளே வீட்டில் இளைய சகோதரர்களுக்குரிய, தந்தைக்குரிய சேவகத்தை செய்யவேண்டிய நிலை உருவாகின்றமையால் அவர்களால் தங்கள் கல்வியை தொடர முடியாத நிலை உருவாததுடன் இதனால் பாடசாலை கல்வியை இடை நிறுத்த தீர்மாணிக்கின்றனர்.

**சிறுவயது காதல்**

அதிகமாக இன்று பாடசாலை மாணவர்கள் மத்தியில் சிறுவயது காதல் என்பது அதிகரித்து வருவதுடன் இதனால் மாணவர்கள் கல்வியில் அக்கறைகாட்ட முடியாத நிலையும், வேறுபல பிரச்சினைகளும் உருவாகி மாணவர்கள் பாடசாலை கல்வியை இடை நிருத்துகின்ற நிலைக்கு இட்டுச் செல்கின்றன.

**பெற்றோர்களின் அக்கறையின்மை**

இவ் ஆய்வு பிரதேசத்தில் காணப்படும் பிள்ளைகளின் பெற்றோர்கள் போதிய கல்வி அறிவு அற்றவர்கள். ஆகையால் தங்களுடைய பிள்ளைகளின் கல்வி அறிவு பற்றிய விடயங்களிலும் அசமந்தப்போக்குடன் இருப்பதுடன் மாணவர்கள் மத்தியிலும் இதே மனநிலை காணப்படுவதால் மாணவர்கள் கல்விக்குரிய முக்கியதுவத்தை வழங்காமல் பாடசாலையை விட்டு இடைவிலகுகின்றனர்.

**ஆசிரியர்களின் அசமந்தப்போக்கு**

பாடசாலையின் தரத்தை உயர்த்தி காட்டும் பொருட்டு வகுப்பில் திறமையாக கல்வி பயிலும் மாணவர்களுக்கே முக்கியதுவம் கொடுப்துடன் திறமையாக இயங்காத மாணவர்களை இரண்டு அல்லது மூன்று வருடங்கள் வகுப்பேற்றப்படாமல் வைத்திருப்பதனால் கல்வி மீது மாணவர்களுக்கு வெறுப்பு ஏற்பட்டு பாடசாலையை விட்டு இடை விலகுகின்றனர்.

**நன்பர்களின் வேண்டுகோள்**

ஏற்கனவே பாடசாலையை விட்டு விலகிய மாணவர்களின் சுதந்திரமான செயற்பாடுகள் காரணமாகவும் அவர்கள் பாடசாலை தொடர்பாக கூறும் தவறான கருத்துகள் காரணமாகவும் அவர்களுடன் இடைவினைப் புரிவதால் இவர்களுக்கும் இடைவிலகுகின்ற எண்ணம் தோன்றுகின்றது. அத்துடன் சிறுவர்களுக்கான தொழில் வாய்ப்புக்கள் கொழும்பு உள்ளிட்ட நகரப்பகுதிகளில் அதிகரித்து வருவதால் சிறுவர் தொழிளாளர்களாக செல்ல பாடசாலையை விட்டு இடைவிலகுகின்றனர்.

மேற்கண்ட பிரச்சினைகளே மலையக மாணவர்கள் பாடசாலைக் கல்வியைப் புறக்கணித்து இடைவிலகுவதில் செல்வாக்கு செலுத்தும் பிரதான காரணிகளாக அடையாளம் காணப்படுவதுடன் இத்தகைய பிரச்சினைகளின் செல்வாக்கு காரணமாகவே மலையக கல்வி வளர்ச்சியும் பின் தங்கியுள்ளமைக்கும் காரணமாகும்.

**முடிவுரை**

இவ் ஆய்வின் பெறுபேறுகளுக்கு அமைய மலையக மாணவர்கள் பாடசாலை கல்வியை புறக்கனித்து இடைவிலகுகின்றமைக்கு பொருளாதார,சமூக,குடும்ப,சூழல்ரீதியாக ஏற்படுகின்ற பிரச்சினைகளே காரணமாக அமைந்தாலும் மிக பிரதான காரணமாக அமைவது பெற்றோர்களின் அக்கறையின்மை என்பது கண்டறியப்பட்டுள்ளன.எனவே மேற்கண்ட பிரச்சினைனளைத் தீர்ப்பதற்கு அரசும் அரசு சாரா நிறுவனங்களும் மலையக மாணவார்களுக்கும், அவர்களது பெற்றோர்களுக்கும் கல்வி மற்றும் இலவச கல்வியின் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வு நிகழ்சிகளை வழங்குவதன் மூலமுமே மாணவர்கள் இடைவிலகள்களை கட்டுப்படுத்த முடியும் என்பதுடன் மலையக கல்வியையும் வளர்ச்சி பெற வழிவகுக்க முடியும்.

**உசாத்துணைகள்.**

சந்திரசேகரன், சோ. (1999).மலையக கல்வி சில சிந்தனைகள். கவிதா பதிப்பகம்: கொழும்பு.-6

சந்திரசேகரன், சோ. (2004).கல்வி ஒரு பன்முக நோக்கு. உமா பதிபப்பகம்:கொழும்பு-6

அரிதர், நா.(1999).மலையகக் கல்வியின் தடைப்பாடுகள். குன்றின் குரல், ஐனவரி-ஏப்ரல் இதழ்-1 ப 03

மேனகா,க. (1992).மலையகக் கல்வி. குன்றின் குறல். செப்டம்பபர் இதழ்-3, ப 03

ஆய்யுப்,s .s. m.(2013).சமூகவியல் அடிப்படை எண்ணக்கருக்கள்.சமூக விஞ்ஞானங்கள் துறை இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம் ஒலுவில்.ப 67.

சந்திரசேகரன், சோ. (2016). மலையகத்தின் அண்மைக்கால சமூக, பொருளாதார நிலை. வீரகேசரி வார வெளியீடு.2016 june 5. ப 3.